www.nammakalvi.com

# அரசுத் தேர்வுகள் இயக்ககம் – சென்னை– 6.

## மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வு மார்ச் – 2023.

## தமிழ் – விடைக்குறிப்புகள்.

**விடைத்தாள் மதிப்பிடும் போது கீழ்க்குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைத் தவறாது பின்பற்றுதல் வேண்டும்.**

1. **நீலம் மற்றும் கருப்பு** மையினால் எழுதப்பட்டுள்ள விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

2. விடைகள் சொந்த நடையில் தெளிவாக அமைந்து தொடர் பிழை, சொற்பிழை, எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை, இலக்கணப்பிழை இன்றி இருப்பின் முழு மதிப்பெண் வழங்குதல் வேண்டும்.

3. எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை, இலக்கணப்பிழை ஒவ்வொன்றிற்கும் கால் மதிப்பெண் வீதம் குறைத்து அவ்வாறு குறைக்கும் மதிப்பெண்கள் எக்காரணம் கொண்டும் வினாவிற்குரிய மதிப்பெண்ணில் நான்கில் ஒரு பங்கிற்கு மேல் மிகாமல் இருத்தல் வேண்டும்.

4. தவறான விடைகளைக் (X) குறியிட்டும் தொடர் பிழைகளை அடிக்கோடிட்டும் ஒற்றுப்பிழைகளைக் (^) குறியிட்டுக் காட்டியும் விதிப்படி அவற்றிற்குரிய மதிப்பெண்களைக் குறைத்தல் வேண்டும்.

5. மதிப்பெண் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு சரியான கருத்திற்கும் தனித்தனியே

✓ குறியிடுதல் வேண்டும்.

6. மிகையாக விடை இருப்பின் **“மிகை’’** என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.

7. ஒரே விடை மீண்டும் எழுதப்பட்டிருப்பின் **“மீண்டும்’’** என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.

8. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவேண்டும். இல்லையெனில் மதிப்பெண் வழங்குதல் கூடாது.

9. வினா எண் குறிப்பிடாத விடைகளுக்கு மதிப்பெண்கள் வழங்குதல் கூடாது.

www.nammakalvi.com

# பகுதி –1

**மதிப்பெண்கள்– 90**

| வ. எண் | விடை | மொத்த மதிப்பெண் |
|---|---|---|
| | **அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** | 14 ×1= 14 |
| 1 | இ) காவியதர்சம் | 1 |
| 2 | ஈ) காவியம் | 1 |
| 3 | ஈ) கன்னிமரா நூலகம் | 1 |
| 4 | அ) மெய்ப்பபடிமம் | 1 |
| 5 | ஈ) 1940 | 1 |
| 6 | அ) பண்புத்தொகை | 1 |
| 7 | இ) தந்தைவழிச் சமூகமுறை | 1 |
| 8 | ஆ) 1812 | 1 |
| 9 | ஈ) 17 | 1 |
| 10 | ஈ) சொல்வது –சொல்லியபடி செய்வது | 1 |
| 11 | ஆ) கம்பராமாயணத்தின் | 1 |
| 12 | ஈ) செப்பல் | 1 |
| 13 | இ) 126 | 1 |
| 14 | ஆ) மனைவியின் | 1 |
| | **பகுதி – II**<br>**பிரிவு – I** | |
| | **எவையேனும் மூன்றனுக்கு விடை தருக** | 3×2 = 6 |
| | (இரண்டு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்) | |
| 15 | **நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது:**<br>• மழைக்காலத்தில் நனைந்திருந்த பகுதிகள் எல்லாம் திடீர் சூரியனின் ஒளிக்கதிர்களால் காய்ந்து விட்டது.<br>• அதனால் நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகத் தெரிகிறது. | 1<br>1 |
| 16 | **மறக்கக் கூடாதது , மறக்கக் கூடியது:**<br>• <u>மறக்கக் கூடாதது</u>: ஒருவர் நமக்குச் செய்த நன்மையை மறப்பது நல்ல தன்று.<br>• <u>மறக்கக் கூடியது:</u> பிறர் செய்த தீமையை அப்பொழுதே மறந்து விடுவது நல்லது. | 1<br>1 |
| 17 | **தொன்மம் :**<br>• தொன்மம் என்றால் பழங்கதை, புராணம் என்று பொருள்.<br>• தொல்காப்பியர் குறிப்பிடும் வனப்புகளுள் ஒன்று தொன்மம்.<br>• காலம் காலமாக உருவாக்கப்பட்டு இறுகிவிட்ட கருத்து வடிவங்களும் தொன்மங்களே. | 2 |
| 18 | **எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும் :**<br>• கலைத்தொழில் வல்ல புலவர்கள் இந்த உலகில் எந்தத் திசையில் சென்றாலும், அத்திசையில் உணவு தவறாமல் கிடைக்கும். | 2 |

| | | |
|---|---|---|
| | **பிரிவு–2**<br>**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக** | 2×2 =4 |
| 19 | இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை.<br>• உவமம் , உருவகம், எச்சம், குறிப்பு, உள்ளுறை, இறைச்சி.<br>**(எவையேனும் நான்கு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.)** | 2 |
| 20 | **எழுத்தாணியின் வகைகள் :**<br>• மடக்கெழுத்தாணி<br>• வாரெழுத்தாணி<br>• குண்டெழுத்தாணி என மூன்று வகைப்படும். | 2 |
| 21 | **பின்னணி இசை:**<br>• பின்னணி இசைச்சேர்ப்பு திரையில் உணர்வுகளை வெளிக்கொணர உதவுகின்றது.<br>• சான்று: கதைநாயகி சன்னல் வழியாக தலையை நீட்டித் தெருவைப் பார்ப்பது மட்டுமே காட்டப்படுகிறது.<br>• அக்காட்சியில் ஒரு மகிழுந்து புறப்பட்டுச் செல்லும் ஒலி இணைக்கப்படுகிறது.<br>• இதில் அவளைப் பார்க்க வந்தவர், அவள் விருப்பத்திற்கு மாறாக அங்கிருந்து புறப்பட்டுச் செல்கிறதைக் காட்டுகிறது. | 1<br><br>1 |
| | **பிரிவு–3**<br>**எவையேனும் ஏழனுக்கு விடை தருக** | 7×2=14 |
| 22 | மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.<br>**<u>தலை, தளை, தழை</u>**<br>• தோட்டத்தில் பசுமையாக முளைத்திருந்த த<u>**ழை**</u>களை இரண்டு மூன்று த<u>**ளை**</u>களாக்கி, த<u>**லை**</u>யில் வைத்து சுமந்து சென்றேன்.<br>(பொருத்தமான வேறு விடையிருப்பினும் மதிப்பெண் வழங்கலாம்) | 2 |
| 23 | **பகுபத உறுப்பிலக்கணம்:** (எவையேனும் ஒன்றனுக்கு மட்டும்)<br>அ) ஈந்த = ஈ + த்(ந்) +த்+அ<br>ஈ –பகுதி<br>த் (ந்) –சந்தி ( ந்–ஆனது விகாரம்)<br>த் –இறந்தகால இடைநிலை<br>அ –பெயரெச்ச விகுதி.<br><br>ஆ) பேசுவார்= பேசு+வ்+ஆர்<br>பேசு–பகுதி<br>வ்–எதிர்கால இடைநிலை<br>ஆர்–பலர்பால் வினை முற்று விகுதி. | 1<br><br>1<br><br><br><br>1<br><br>1 |
| 24 | **ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக:**<br>அ) தனியாழி = தனி+ஆழி<br>விதி1–இ ஈ ஐ வழி யவ்வும்–தனி+ய்+ஆழி<br>விதி2–உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே–தனியாழி<br>ஆ) அருங்கானம் = அருமை+கானம்<br>விதி1–ஈறுபோதல்–அரு+கானம்<br>விதி2–இனமிகல்–அருங்கானம் | 1<br><br>1<br>1<br>1 |

www.nammakalvi.com

| | | |
|---|---|---|
| 25 | **கலைச்சொல்லாக்கம் :**<br>(அ) Passport–கடவுச்சீட்டு (ஆ) Folder-மடிப்புத்தாள் / கோப்புறை<br>**(குறிப்பு–செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா)**<br>**பின்வரும் மரபுச்சொல்லைத் தொடரில் அமைத்து எழுதுக.**<br>**ஆற அமர** = அவசரப்பட்டு உணவருந்தாமல் **ஆற அமர** இருந்து உண்ணவேண்டும்.<br>(பொருத்தமான பிற விடை எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக) | 1<br>1<br><br>2 |
| 26 | **படத்திற்குப் பொருத்தமான பின்வரும் திருக்குறளின் விடுபட்ட இடங்களைப் பூர்த்தி செய்க.**<br>1. எள்ளாமை<br>2. அச்சாணி | 1<br>1 |
| 27 | **வல்லின மெய்களை இட்டும், நீக்கியும் எழுதுக.**<br>ஆசிரியருக்குக் கீழ்ப்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றைத் தெரிந்து கொண்டு அறியாமையினை அகற்றிப் பல நல்லனவற்றைக் கற்றுக் கொடுக்கும். | 2 |
| 28 | **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**<br>இரவுக்குச் சிற்றப்பாவைக் காவலுக்குப் போகச் சொல். | 2 |
| 29 | **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.**<br>**(எவையேனும் ஒன்றனுக்கு மட்டும் விடை அளித்திருந்தால் முழு மதிப்பெண் வழங்கலாம்)**<br>அ) வெங்காயம் = வெம்+காயம்<br>1) வெங்காயத்தினை உணவினில் இட்டேன்.<br>2) வெம் காயத்திற்கு மருந்தினை உட்கொண்டேன்.<br>(வெம்மையாக காயம் இருப்பதால் மருந்து உட்கொண்டேன்)<br><br>ஆ) தலைமை = தலை+மை<br>1. தலைமை வகிக்க வேண்டும்.<br>2. தலை மையை வாங்க வேண்டும்.<br>(பொருத்தமான விடை எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்) | 2 |
| 30 | **தொடரில் இடம் பெறும் மரபுப்பிழைகளை நீக்கி எழுதுக.**<br>ஆட்டுப் **பட்டியைச்** சுற்றிலும் எலிகள் **வளைகள்** அமைத்திருந்தன. | 2 |
| | **பகுதி–III / பிரிவு–1** | |
| | **எவையேனும் இரண்டனுக்கு விடை தருக** | 2×4=8 |
| 31 | **பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய் என்று சிற்பி கூறுவதன் பொருள்:**<br>• முற்காலத்தில் முதல் இடைச்சங்கங்கள் கடல்கோளால் அழிந்த போதிலும், மூன்றாம் தமிழ்ச்சங்கம் அமைத்த பாண்டியரின் அவை முன்னிலையில் தமிழ் அன்னை கொலுவாக வீற்றிருந்தாள்.<br>• பாண்டிய நாடெங்கும் தமிழ்மொழி இலக்கிய இலக்கண வளம் பெற்றுத் தழைத்தோங்கியது.<br>• தமிழன்னை ஈன்று தந்த பாரி முதலான கடையெழு வள்ளல்கள் தமிழ்ப் புலவர்களைப் பெரிதும் ஆதரித்தனர்.<br>• இத்தகைய பழமை நலமிக்க தமிழ்மொழி காலத்திற்கேற்ப புதிய புதிய இலக்கியங்களைப் பெற்று மீண்டும் தன்னைப் புதுப்பித்துக் கொண்டும், பழஞ்சிறப்பைத் தக்க வைத்துக் கொண்டும் மிளிர வேண்டும். | 1<br><br>1<br>1<br>1 |

www.nammakalvi.com

| | | |
|---|---|---|
| 32 | **இராமலிங்க அடிகளார் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டும் எனக்கேட்கிறார்.**<br>• **உத்தமர் உறவு :** ஒரு நெறிப்பட்ட மனத்துடன் இறைவனது மலர் போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்களின் உறவு தனக்கு வேண்டும் என்கிறார் வள்ளலார்.<br>• **வஞ்சகர் உறவு:** தம் உள்ளத்தில் ஒன்றை நினைத்துக்கொண்டு புறத்தில் வேறொன்றாகப் பேசும் வஞ்சகர்களின் உறவு தனக்கு ஏற்படாமல் காக்குமாறு கந்தவேளிடம் வள்ளலார் வேண்டுகிறார். | 2<br><br>2 |
| 33 | **வாடைக் காலத்தில் கோவலர்கள் தேடிய பாதுகாப்பு:**<br>• கோவலர்கள் தங்கியிருந்த மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்து எழுந்த மேகமானது உலகம் குளிருமாறு புதிய மழையைப் பொழிந்தது.<br>• தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தை வெறுத்த, வளைந்த கோலையுடைய ஆயர் எருமை, பசு, ஆடு ஆகிய நிரைகளை வேறு மேடான நிலத்தில் மேய விட்டனர்.<br>• தாம் பழகிய நிலத்தை விட்டுப் பெயரும் நிலையால் வருத்தம் அடைந்தனர்.<br>• குளிரின் மிகுதியால் ஆயர்கள் தலையில் சூடியிருந்த நீண்ட இதழ்களையுடைய காந்தள் மாலை கசங்கியது.<br>• பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றிய போதிலும் ஆயர்களது பற்கள் நடுங்கின.<br>• மலையையே குளிரச் செய்வது போன்றிருந்தது குளிர்கால நள்ளிரவு.<br>**(நான்கு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 |
| 34 | **அதிசய மலரின் பூச்செடி முளைத்ததாக தமிழ் நதி கூறுவது:**<br>• குண்டு மழை பொழிந்து நிலங்கள் அழிக்கப்பட்டன.<br>• பச்சையம் இழந்த சாம்பல் நிலம் காட்சியளித்தது.<br>• பொட்டல் வெளியில் போரின் பின் பிறந்த குழந்தையென அதிசய மலர் பூத்திருக்கிறது.<br>• ஆட்களற்ற பொழுதில் உலவிய யானைகளின் எச்சத்திலிருந்து எழுந்திருக்கலாம், அல்லது எவருடைய சப்பாத்துப் (காலணி) பின்புறம் விதையாக ஒட்டிக்கிடந்து செடியாக முளைத்திருக்கலாம். | 1<br>1<br>1<br><br>1 |
| | <u>பகுதி–III / பிரிவு–2</u><br>**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக** | 2×4=8 |
| 35 | **சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும்.**<br>• இசையோடும் இசைக்கருவியோடும் தான் கவிதை பிறக்கிறது.<br>• ஓசையும் பொருளும் இணைந்து கவிதை கலை வடிவம் பெறுவதை “ ஒலிப்பின்னல்” என்கிறோம்.<br>• இப்பண்பைச் சங்கப் பாடல்கள் பலவற்றில் காணலாம்.<br>**<u>சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம்:</u>**<br>• “கடந்தடு தானை மூவிருங்கூடி<br>உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே”<br>என்ற புறநானூற்றுப் பாடலில் வன்மையான உணர்ச்சியைக் காட்டுகிற விதத்தில் **<u>க,த,ட,ற</u>** முதலிய வல்லின மெய்கள், பிற | 1<br>1<br><br>1<br><br><br><br>1 |

| | | |
|---|---|---|
| | மெய்களைக் காட்டிலும் அதிகமாக வருகின்றன.<br>• இதன் மூலம் ஒலிக்கோலத்தின் வலிமையை அறிந்து கொள்ளலாம்.<br>**(ஏற்புடைய சான்றுகள் எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்.)** | |
| 36 | **நீங்கள் ஆசிரியரானால் ......**<br>• நான் ஆசிரியரானால்.......<br>• மாணவர்களைப் பெயர் சொல்லி அழைப்பதை விட தம்பி, தங்கை என்று அழைப்பேன்.<br>• இதன் மூலம், ஆசிரியர்–மாணவர் இடைவெளியைக் குறைத்து நெருக்கத்தை அதிகரிப்பேன்.<br>• பாடங்களைக் கற்பிப்பதோடு வாழ்க்கைப் பாடங்களையும் இணைத்துக் கற்பிப்பேன்.<br>• மாணவர்கள் செய்யும் தவறுகளைத் திருத்திக் கொள்ளும் வகையில் அன்பாகவும் கனிவாகவும் அறிவுரைகள் வழங்கி நெறிப்படுத்துவேன்.<br>**(பொருத்தமான வேறு விடைகள் எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)** | 4 |
| 37 | **மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள்:**<br>• மயிலை சீனி. வேங்கடசாமி, 16.12.1900 ஆம் ஆண்டு சென்னை மயிலாப்பூரில் பிறந்தார்.<br>• இவரின் தந்தை ஒரு சித்த மருத்துவர். இவரின் தமையனார் கோவிந்தராசன் ஒரு தமிழாசிரியர்.<br>• இவர் தொடக்கப்பள்ளியில் 25 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார்.<br>• விபுலானந்த அடிகள், கா.சுப்பிரமணியர், திரு.வி.க, தெ.பொ.மீ, ச.த.சற்குணர் ஆகிய அறிஞர் பெருமக்களிடம் தொடர்பு கொண்டிருந்தார்.<br>• சமயம், மானுடவியல் , தமிழக வரலாறு, தொல்பொருள் ஆய்வு, கலைவரலாறு, மொழியாய்வு முதலான பல துறைகளிலும் இவர் கவனம் செலுத்தினார்.<br>• திருமணமே செய்து கொள்ளாமல் தம் வாழ்வை முழுமையாகத் தமிழியல் ஆய்வுக்கு ஒதுக்கியவர்.<br>**(எவையேனும் நான்கு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 |
| 38 | **தாய்வழிக் குடும்பம் குறித்து பக்தவத்சல பாரதி கூறும் கருத்துகள்:**<br>• சங்க காலத்தில் கண சமூகத்துக்குத் தாயே தலைமை ஏற்றிருந்தாள்.<br>• தாய்வழியாகவே குலத்தொடர்ச்சி குறிக்கப்பட்டது.<br>• பதிற்றுப்பத்து கூறும் சேரநாட்டு மருமக்கள் தாய முறை இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.<br>• 'இவளது மகன்' என்று கூறப்படும் உரிமை இருந்தது.<br>• திருமணத்திற்குப்பின் மனைவியின் இல்லத்துக்குச் சென்று கணவன் வாழ்வதே நடைமுறையாக இருந்துள்ளது.<br>• தாய்வழி முறையில் குடும்பத்தின் சொத்தும் வளங்களும் செல்வங்களும் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன.<br>**(எவையேனும் நான்கு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 |

| | | |
|---|---|---|
| | **பிரிவு–3**<br>**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக** | 3×4=12 |
| 39 | **அ) ஏகதேச உருவக அணி**<br>• **அணி இலக்கணம்:** செய்யுளில் ஒரு பொருளை உருவகம் செய்துவிட்டு அதற்கு இணையான மற்றொரு பொருளை உருவகம் செய்யாது விட்டுவிடுவது ஏகதேச உருவக அணியாகும்.<br>• **சான்று :**<br>சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்<br>ஏமப் புணையைச் சுடும்.<br>• **பொருத்தம்:** சினத்தை நெருப்பாகவும் இனத்தைத் தெப்பமாகவும் உருவகம் செய்த வள்ளுவர், உலக வாழ்க்கையைக் கடலாக உருவகம் செய்யாமல் விட்டுவிட்டார். இது ஏகதேச உருவக அணியாகும். | 2<br><br>1<br><br>1 |
| | **(அல்லது)** | |
| | ஆ) உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்<br>பாம்போடு உடன்உறைந் தற்று.<br>இக்குறட்பாவில் பயின்று வரும் அணி **உவமையணி** ஆகும்.<br>**அணி இலக்கணம்:** உவமை ஒரு தொடராகவும், உவமேயம் மற்றொரு தொடராகவும் அமைந்து, உவம உருபு வெளிப்படையாக வருவது உவமையணியாகும்.<br>**அணி பொருத்தம்:**<br>உவமை : ஒரு குடிசையில் பாம்புடன் வாழும் வாழ்க்கை.<br>உவமேயம்: அகத்தில் உடன்பாடு இல்லாதவருடன் கூடி வாழ்வது.<br>உவம உருபு : அற்று. | 1<br><br>2<br><br>1 |
| 40 | **இலக்கிய நயம் பாராட்டுக :**<br>• மையக்கருத்து<br>• ஏற்புடைய நயங்கள் எவையேனும் மூன்று<br>❖ தொடை நயம்<br>❖ சொல் நயம்<br>❖ அணி நயம்<br>❖ சந்த நயம்<br>❖ சுவை நயம் | 1<br><br>3 |
| 41 | **பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.**<br>• பழமொழி விளக்கம்<br>• வாழ்க்கை நிகழ்வு (கதை)<br>• பழமொழி உணர்த்தும் நீதி<br>**(பொருத்தமான விடை எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.)** | 1<br>2<br>1 |
| 42 | **அ) வெண்பாவிற்கான இலக்கணம் :**<br>❖ இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை பிறழாது பா அமைய வேண்டும்.<br>❖ ஈற்றடி முச்சீராகவும் ஏனையவை நாற்சீராகவும் இருக்கும்.<br>❖ ஈரசைச்சீர்களில் மாச்சீரும் விளச்சீரும், மூவசைச்சீரில் காய்ச்சீரும் வரும்.<br>❖ ஈற்றுச்சீர் நாள், மலர்,காசு,பிறப்பு ஆகிய வாய்பாடுகளுள் ஒன்றைக் கொண்டு முடியும்.<br>❖ செப்பலோசைப் பெற்று வரும். | 1<br>1<br>1<br>1 |

| | | |
|---|---|---|
| | **(அல்லது)** | |
| | **ஆ) பாடாண் திணை :**<br>**திணை விளக்கம்:** ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண்திணை ஆகும்.<br>**<u>சான்று</u> :**<br>" காய் நெல் அறுத்துக் கவளம் கொளினே''<br>எனத்தொடங்கும் பிசிராந்தையார் பாடிய புறநானூற்றுப் பாடல்<br>**திணைப்பொருத்தம் :**<br>இப்பாடல் பாண்டிய மன்னன் அறிவுடை நம்பியின் நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவதால் **பாடாண் திணை** ஆயிற்று.<br>**(குறிப்பு** – அதியமானை ஔவையார் பாடியுள்ள"வாயிலோயே, வாயிலோயே'' – என்ற பாடலை எழுதியிருப்பினும் மதிப்பெண் வழங்கலாம்) | 2<br><br><br>1<br><br><br><br><br>1 |
| 43 | **<u>தமிழாக்கம் தருக</u>:**<br>என்னிடம் அடிப்படையில் நல்ல பழக்கங்கள் இருப்பதை உறுதி செய்கிறேன். எனக்கு வயதில் மூத்தோரை மதிப்பது, அவர்களைச் சந்திக்கும் பொழுது வாழ்த்துக்கூறுவது, விடைபெறும் பொழுது நல்வாழ்த்துக்கூறுவது. இது தவிர சட்டத்தைப் பின்பற்றுதல், ஏழை எளியோர்க்கு உதவுதல், நோயுற்றவர்களுக்கு உதவி செய்தல், வீடற்றவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தல், மாற்றுத் திறனாளிகளுக்கு உதவுதல் ஆகியவை என் நல்ல வழக்கங்களாகும். என் அமைதியான வாழ்க்கைக்காக எழுதுதல், இசை கேட்டல், நடனமாடுதல், பாடுதல் போன்றவை நான் வளர்த்துக் கொண்ட நல்ல பழக்கங்களாகும். இவை என் ஆன்மாவின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. | 4 |
| (43) | **காது கேளாதவர்களுக்கான மாற்று வினா :**<br>1. நகரங்கள்<br>2. சென்னை<br>3. சமூகத்தின் கடந்தகால வரலாற்றுக்கும், நிகழ்கால வாழ்விற்கும், எதிர்கால வளர்ச்சிக்கும் நகரங்கள் துணை நிற்கின்றன.<br>4. சென்னையின் வரலாறும், வளர்ச்சியும். | 1<br>1<br>1<br><br>1 |
| | **பகுதி–IV**<br>**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக**<br>**குறிப்பு:ஏற்புடைய ஆறு கருத்துகள் இருப்பின் முழுமையான மதிப்பெண் வழங்கலாம்.** | 3×6=18 |
| 44 | **(அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகள்:**<br>• தமிழ் அழகியலைக் கட்டமைப்பதற்குச் சங்க இலக்கியமே முதன்மை ஆதாரம்.<br>• உண்மையையும் உணர்வையும் அறிவுப்புலனையும் அழகியல் இலக்கியமாக ஆக்குகிறது.<br>• மொழி சார்ந்த கலை என்பது இலக்கியம் ஆகும். மொழியின் தனித்துவமான பண்புகள் இலக்கியத்திற்கு ஒரு சிறப்புத் தன்மையைத் தந்துவிடுகிறது. இதை **'கவித்தனம்'** அல்லது **'இலக்கியத்தனம்'**என்பர்.<br>• மொழிக்குள் இருக்கும் ஒரு வலிமை மிக்க ஆற்றல் கவிதைக்காக, இலக்கியத்துக்காகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. | 6 |

| | | |
|---|---|---|
| | • **கவிதையின் இயங்காற்றல் தான் நடை.**<br>• இசையோடும் இசைக் கருவியோடும் தான் மொழி சார்ந்த கவிதை பிறக்கிறது.<br>• ஓசையும் பொருளும் இணைந்து கலை வடிவம் கொள்வதை **'<u>ஒலிப்பின்னல்</u>'** என்கிறோம்.<br>• வன்மையான உணர்ச்சியைக் காட்ட வல்லினமெய்கள் அதிகமாக வருகின்றன. பாடல்களில் நெடில் ஒலிகளின் வருகை, சில ஒலிகளும் சில சொற்களும் திரும்பவரல் தன்மை. சொல் விளையாட்டுக்கள் போன்ற '**<u>ஒலிக்கோலம்</u>**' சங்க பாடல்களில் முக்கியமான பண்பாகும்.<br>• சொல் வளம் என்பது தனிச் சொற்களாய் நிறைந்து அமைவதைக் குறிக்கும். ஒன்றிற்கு மேற்பட்ட சொற்கள் கவவுக்கை நெகிழாமல் முயங்கிக் கிடப்பதையும் குறிக்கும்.<br>• சொல்பவனுடைய மொழித்திறனைக் கேட்போர் பெற வேண்டும். பரிமாறப்படும் உணர்வுகளுக்கும் செய்திகளுக்கும் ஏற்பத் தொடர்கள் நேர் நடத்தும் ஏறி இறங்கியும் திரும்பியும் சுழன்றும் இயங்கும். | |
| | **(அல்லது** | |
| | **(ஆ) <u>திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம்</u> :**<br>• திருக்குறள் ஓர் இலக்கியம் மட்டுமன்று, அது மனிதனை மாண்புடையவனாக்கும் மறைநூல்.<br>**<u>மரபுகளை மாற்றுதல்</u>**<br>• கள்ளுண்டு களித்தலையும், புலால் உண்ணுதலையும் சமூகத்தின் பண்புகளாய் ஏற்று வாழ்ந்த காலகட்டத்திற்குப் பிறகு திருக்குறள் தோன்றுகிறது.<br>• 'உண்ணற்க கள்ளை' என்றும், 'ஊன் உண்பவன் நரகத்தில் துயர் அடைவான்' என்றும் சுட்டிக் காட்டுகிறது.<br>**<u>அறநெறிப் பட்ட வாழ்க்கை</u>**<br>• மனத்துக்கண் மாசின்றி வாழ்தலே உயரிய வாழ்க்கை என நீதி உரைக்கிறது.<br>**<u>சமூக ஒற்றுமை</u>**<br>• "சாதி, மதம் ஆகியவற்றின் பெயரால் நிலவும் ஏற்றத் தாழ்வுகளையும் கொடுமைகளையும் களைந்திட முயன்றவர் வள்ளுவர்". உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று உலகினில் எங்கும் இல்லை என்று தீர்க்கமாகச் சொன்ன ஞானி வள்ளுவர்<br>**"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**<br>**செய்தொழில் வேற்றுமை யான்"** என்பது வள்ளுவத்தின் வாக்கு.<br>• வையம் எவ்வாறு வாழ வேண்டும் என்பதற்காக அறக்கருத்துக்களை அழகிய முறையில் விதித்தும், வேண்டியும், தடுத்தும் காட்டிய விதம் சிறப்பானது. வள்ளுவத்தை வாசிப்போம்; வையகத்தை நேசிப்போம்.<br>**(ஏற்புடைய கருத்துகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம்)** | 6 |

www.nammakalvi.com

| | | |
|---|---|---|
| 45 | <u>அ.நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து</u> : சரியான கலந்துரையாடல் கருத்துத் தொகுப்பு இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம். | 6 |
| | **(அல்லது)** | |
| | **<u>ஆ.மயிலையார் ஓர் ஆராய்ச்சிப் பேரறிஞர்.</u>**<br>• ‘கிறித்துவமும் தமிழும்’ என்னும் நூலை மயிலையார் எழுதினார். இதுவே அவருடைய முதல் நூலாகும். அதைத்தொடர்ந்து ‘பௌத்தமும் தமிழும்’, ‘சமணமும் தமிழும்’ ஆகிய நூல்களை இயற்றினார்.<br>• தமிழ் எழுத்தியலின் வளர்ச்சியை நன்குணர்ந்தவர். வட்டெழுத்து, கோலெழுத்து, தமிழ் பிராமி ஆகியவற்றில் புலமைப் பெற்றிருந்ததால் சாசனங்களை எளிதில் வாசித்து ஆராய்ந்தார்.<br>• கி.பி.3 முதல் கி.பி. 9 வரையில் ஆட்சிபுரிந்த மன்னர்களைப்பற்றி எழுதியுள்ளார்.<br>• மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் மற்றும் மூன்றாம் நந்திவர்மன் பற்றியும் எழுதியுள்ளார்.<br>• சங்ககால மூவேந்தர்கள், கொங்கு நாட்டு மன்னர்கள், துளுநாட்டு மன்னர்கள், களப்பிரர் மற்றும் இலங்கை குறித்த வரலாறு ஆகியவற்றையும் எழுதியுள்ளார்.<br>• தமிழரது கலைத்திறனை எடுத்தோதும் **‘தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்’** என்னும் நூல் கவின் கலைகள் குறித்துத் தமிழில் வெளிவந்த முதல் நூல்.<br>• தொல்காப்பியம் , சங்க இலக்கியம், கல்வெட்டுகள் பற்றிய ஆய்வுகள் செய்தார்.<br>• ‘தமிழ் நாட்டு வரலாறு’ என்னும் நூல் இவருடைய மீட்டுருவாக்க முயற்சிக்குச் சரியான சான்றாகும்.<br>• **<u>துளு</u>** மொழியையும் **<u>தமிழ்</u>** மொழியையும் ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார். | 6 |
| 46. | **(அ) "கோடை மழை " கதை வாயிலாக விளக்கப்படும் மனிதநேயப் பண்புகள்:**<br>• முன்னுரை<br>• பெரியவர் ஆறுமுகத்திற்கும் குழந்தைக்குமான பாசப் பிணைப்பு<br>• மருந்துக்கடை பாபுவின் மனிதநேயம்<br>• பெரியவரின் மனமாற்றம்<br>• தத்து எடுக்க வந்த தம்பதியின் பண்பு நலன்<br>• பாபுவின் கருணை<br>• முடிவுரை | 6 |

www.nammakalvi.com

| | | |
|---|---|---|
| | (அல்லது) | |
| | **ஆ. பாரதியின் கடிதம் வாயிலாக அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று :**<br>• **மொழிப்பற்று :**<br>❖ தமிழை வளர்ப்பதையே எப்போதும் கடமையாகக் கொள்ள வேண்டும்.<br>❖ தமிழில் புதியன புகுதல் வேண்டும்<br>❖ உண்மை இன்பம் அதிகமாக வேண்டும்.<br>❖ தமிழ்நாட்டில் வீதிகள் தோறும் தமிழ்ப் பள்ளிக் கூடங்கள் தோன்ற வேண்டும்.<br>❖ பிறமொழியில் உள்ள இசை, சிற்பம், பூமி நூல்கள், வான நூல்கள் என அனைத்துத் துறை சார்ந்த நூல்களும் தமிழில் பெருக வேண்டும்.<br>• **சமூகப்பற்று :**<br>❖ நம்மைவிட மெலியவருக்கு நாம் இரக்கப்பட்டு அவர்களை நமக்கு இணையானவராக ஆக்க வேண்டும்.<br>❖ அனைத்துத் துறையிலும் உயர வேண்டும்.<br>❖ ஆணும் பெண்ணும் சரிநிகர் சமம் என்று கொள்ளல் வேண்டும்.<br>❖ பெண்ணைத் தாழ்த்துபவர்கள் தன் கண்ணைத் தானே குத்திக் கொண்டதற்குச் சமம்.<br>❖ தமிழ்நாட்டில் தொழில்கள் பெருக வேண்டும். | 6 |
| | **பகுதி –V**<br>**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக** | 4 +2=6 |
| 47 | **(அ) <u>தெய்வமணிமாலை</u>**<br>ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற<br>உத்தமர்தம் உறவுவேண்டும்<br>உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்<br>உறவுகல வாமைவேண்டும்<br>பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை<br>பேசா திருக்கவேண்டும்<br>பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்<br>பிடியா திருக்கவேண்டும்.<br>–இராமலிங்கஅடிகள். | 4 |
| | **(ஆ) திருக்குறள்**<br>தன்னைத்தான் காக்கின் சினம்காக்க ; காவாக்கால்<br>தன்னையே கொல்லும் சினம். | 2 |